2025 – ஜீலை மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 169 / 2023*

*2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 24– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, ஈஸ்வரி |
| கணவர் பெயர் | : | சுந்தர்ராஜ் |
| ஊர் | : | நாட்டார்மங்கலம் |
| வட்டம் | : | ஆலத்துார் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| வயது | : | 50 |

**தேதி: 24.07.2025.**

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 3–ம் மனுதாரர் ஆவேன். நான் எனது தரப்பில் ம.சா.1 ஆக இருந்து எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கின்றேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையானவை என்றும், அவை என்னால் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு எனக்கு படித்து காண்பிக்கப்பட்டது என்றும், அவற்றை நான் சரியென்று ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்துள்ளேன் என்றும், பிரமாணத்தின் பேரில் உறுதியளிக்கின்றேன். என்னால் தாக்கல் செய்யப்படும் பின் வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்து கொள்ள வேண்டுமாய் பிரார்த்திக்கின்றேன்.

1). 18.01.2023–ம் தேதி நடைபெற்ற விபத்து தொடர்பாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட உண்மை நகலை தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2). 19.08.2023–ம் தேதி எனது தாயாரான 1–ம் மனுதாரர் இறந்ததற்குண்டான இறப்புச்சான்றிதழின் இணையதள நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3).22.09.2023–ம் தேதி எனது தாயாருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழின் இணைய தள நகலை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

4). 18.01.2023–ம் தேதி முதல் 08.02.2023 –ம் தேதி வரை எனது தாயார் திருச்சி ரத்னா குளோபல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

5). 19.04.2023–ம் தேதி முதல் 24.04.2023 –ம் தேதி வரை எனது தாயார் திருச்சி ரத்னா குளோபல் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**6).** 05.07.2023–ம் தேதி முதல் 07.07.2023 –ம் தேதி வரை எனது தாயார் திருச்சி சுந்தரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

7). எனது தாயார் சிகிச்சை பெற்றதற்குண்டான மருத்துவ குறிப்புகளை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

8). எனது தாயார் சிகிச்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணங்களுக்குண்டான ரசீதுகள் 146– எண்ணிக்கை தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9). 08.02.2023–ம் தேதி சத்தியா ஆம்புலன்ஸ் சர்வீசால் வழங்கப்பட்ட ரசீது தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10). சி டி ஸ்கேன் ரிப்போர்ட் எண்ணிக்கை – 11 ஐ தாக்கல் செய்கிறேன். அது **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11). விபத்து காயங்களுக்காக எனது தாயாருக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர்படங்கள் எண்ணிக்கை –5 ஐ தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

12). சி டி ஸ்கேன் பிலிம்கள் எண்ணிக்கை – 4 ஐ தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**( மேற்படி ம.சா.ஆ.8, 9 ஆகிய சான்றாவணங்கள் 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. விபத்தில் எனது தாயாருக்கு ஏற்பட்ட காயங்களின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தாயாருக்கு சிகிச்சை முடிந்த பின்னர் வீட்டில் வைத்து தான் எனது தாயார் இறந்தார் என்றால் சரிதான். இந்த இழப்பீட்டு மனுவை எனது தாயார் தான் தாக்கல் செய்தார்.விபத்து வழக்கை தாக்கல் செய்வதற்கு எனது தாயார் நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜரானாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவ சிகிச்சைக்கு பின்னர் எனது தாயார் பூரண குணம் அடைந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் நல்ல நிலையில் இருந்ததால் தான் நேரடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் இறந்த உடன் காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லையென்றால் சரிதான். எனது தாயாருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கும், அவரது மரணத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்பதால் தான் நாங்கள் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லையென்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லையென்றால் சரிதான். எனது தாயார் எனது

தம்பியான 4–ம் மனுதாரரின் பராமரிப்பில் இருந்தார். நானும், எனது சகோதரியான 2–ம் மனுதாரரும் எங்களது கணவர் வீட்டில் தனியாக இருந்தோம். நானும், 2 மற்றும் 4–ம் மனுதாரர்கள் யாரும் எனது தாயாரை சார்ந்து வாழவில்லையென்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் கூலி வேலை மற்றும் பால் வியாபாரம் செய்து மாதம் ரூ.15,000/– வரை வருமானம் ஈட்டி வந்ததாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது தாயாருக்கு 65 வயதிருக்கும். எனது தாயாரின் வயதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. மருத்துவ ரசீதுகள் அனைத்தும் வழக்கிற்காக மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக இழப்பீடு கோரி எனது தாயாரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை நாங்கள் தொடர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் விபத்து காயங்களின் காரணமாக இறக்கவில்லையென்றும், அவரது வயோதிகத்தின் காரணமாக தான் இறந்து போனார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றும், இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– கே. முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**